# இலக்கிய இன்பம்

ஓர் அழகான ஆற்றங்கரை. அந்த ஆற்றின் கரையில் தென்றலின் இதத்தில் நடை போடுகிறார் ஒரு புலவர். மெல்லச் சிந்துகின்ற இளவேனில் மழைத்துளிகள் உடலுக்குப் புத்துணர்வை அளிக்கின்றன. மெல்ல நிமிர்ந்து பார்க்கிறார் புலவர். கறுத்துத் திரண்டு வரும் நீர் சுமந்த முகில்கள் மரங்களின் மீது படிந்து வருகின்றன. நீரைக் கிழித்து எதிர் ஏறும் மீன்களும் அயலாடும் மயில்களும் மகிழ்வில் திளைக்கின்றன. புரண்டடித்துப் பாய்கிற ஆற்றை எதிர்த்து ஏறி வந்த வாளைமீன் ஒன்று பேரலை ஒன்றை எதிர்த்து எகிறிப் பாய்கிறது. அந்தத் திமிறற் பாய்ச்சலினால் ஆற்றங்கரையில் வேலிபோல் நின்றிருந்த கமுகு மரத்திலேறுகிறது. பின் அங்கிருந்து துள்ளி மழை முகிலை ஊடுருவிக் கிழிக்கிறது. அதனால் முகில் கிழிந்து மழை சோவெனப் பொழிகிறது. அந்த மழையோடு வாளைமீன் கீழே இறங்குகிறது. இக் காட்சியைக் கண்டு புலவர்

***வெள்ளத் தடங்காச் சினைவாளை***
***வேலிக் கமுகின் மீதேறித்***
***துள்ளி முகிலைக் கிழித்துமழைத்***
***துளியோடிறங்கும்***

என்ற பாடலை நினைத்துத் தன்னுள் மகிழ்ந்தவாறு நடக்கிறார். மெல்ல மழை முகில் விலகி வானம் வெளுத்து வருகிறது.புலவர் ஆற்றோர வாய்க்காலில் இறங்கி நடக்கிறார். உழவர் ஏர் பூட்டி நீர் தேக்கிய வயல்களை உழுது சேறாக்குகின்றனர். மண்ணிடையே புதையுண்டு கிடந்த சங்குகள் மேலே மிதக்கின்றன. வயலோரத்து மேடுகளில் தென்னந் தோப்புகளும் பலாக்காடுகளும் நிறைந்து காணப்படுகின்றன. குரங்குகள் பலாக் கனிகளைப் பறிப்பதைக் கண்ட உழவர்கள் வயலில் மிதந்த சங்குகளை எடுத்து குரங்குகளை விரட்ட எறிந்தனர். சினங்கொண்ட குரங்குகள் இளநீரைப் பிடுங்கி உழவரை நோக்கி எறிகின்றன. இக் காட்சியைக் கண்ட புலவரின் உள்ளம் களிப்படைகிறது. அக் களிப்பில்

*பங்கப் பழனத் துழுமுழவர்*
*பலாவின் கனியைப் பறித்ததென்று*
*சங்கிட் டெறியக் குரங்கிளநீர்*
*தனைக் கொண் டெறியும்*

என்ற பாடலைப் பாடிக் கொண்டு நடக்கிறார். புலவர் தன்னை மறந்து இயற்கையின் அழகில் ஆழ்ந்தபடி செல்லும் போது வயலோரக்குளம் ஒன்றில் ஆம்பலும் அல்லியும் தாமரையும் மலர்ந்து நிறைந்து மூடிக் கிடக்கின்றன. அதனிடையே நீரில் அமிழ்ந்து கிடக்கின்றன எருமைகள். அந்த எருமைகளிடத்து முட்டி மோதிய சுறாக்களைச் சினந்து எருமைகள் கொம்பினால் சாடும். திடுக்குற்ற சுறாக்கள் உழன்று சீறிப் பாய்கின்றன. அருகிலே வயலுக்கு இஞ்சியால் வேலியிடப்பட்டுள்ளது. இஞ்சியூடே மஞ்சளும் விளைந்துள்ளது. வரப்பிலே வேரிற் பழுத்த பலாப்பழம். சுறாக்கள் பாய்ந்து வரம்பிற் பழுத்திருக்கும் பலாக்கனிகளைக் கீறிப்பிளந்து இஞ்சி வேலியில் இடறி மஞ்சளுள் வீழ்கின்றன. இதைக் கண்ட புலவர்

***துஞ்சி மேதி சுறாக்களைச் சீறச்***
***சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி***

என்ற பாடலை நினைத்தவாறு தொடர்ந்து நடக்கிறார். அந்தி மாலை வேளையில் பூத்திருக்கும் சூரியகாந்திப்பூ பூந்தாது என்னும் மஞ்சட் பொடியை முகமெல்லாம் பூசியபடி கதிரவனை நோக்கியவாறு தவம் கிடக்கிறது. இது என்ன கதிரவனின் பிரிவைத் தாங்கமுடியாமல் துயருறுகிறதா? அப்படியானால் கதிரவனின் அன்பிற்குரியவளான தாமரைமலர் இந்தக் காட்சியைக் கண்டால் என்ன செய்வாள் என்று தனக்குள் சிரித்துக்கொண்டு

***மஞ்சட் குளித்து முகமினுக்கி நல்ல***
***மாயப் பொடிபூசி நிற்குநிலை***
***கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ***
***கண்ணீ ருகுக்குமோ ஆரறிவார்***

என்று பாடியவாறே புலவர் கண்ணில் இருந்து மறைகிறார். உள்ளங்கவரும் காட்சிகளை மொழியில் அமைப்பது இலக்கியம், தமிழ்மொழியில் புலவர் இயற்கைக் காட்சிகளை இலக்கியமாக்கி இன்புறத் தருவதே இலக்கிய இன்பம்.